**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW28**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **செல்வராஜ்** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 12th day of December 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார்கள் மற்றும் 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா P.T.Warrant மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் காணொலி காட்சி வழியாக ஆஜராகியுள்ளார். விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை காணொலி காட்சி மூலமாக கணினி திரையிலேயே எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் புஞ்சைத்தோட்டக்குறிச்சியில் வசித்து வருகிறேன். விவசாய கூலி வேலை செய்கிறேன். சாட்சி தங்கமணியை தெரியும் நாங்கள் இருவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். கடந்த 2020ம் வருடம் தோட்டக்குறிச்சி மலையம்மன் கோவிலுக்கு நானும், என் நண்பர் தங்கமணியும் சென்றோம். அங்கு ஒருவர் இருந்தார். அவருடன் போலிசார்

அவருடன் வந்தார்கள். அங்கு போலீசார் வந்து எங்களிடம் கையெழுத்து போடுமாறு கேட்டார்கள். நாங்கள் இருவரும் கையெழுத்து போட்டுக்கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் 6ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது இதுதான். **என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.48 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.49 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில், கடந்த 21.12.2020 அன்று மதியம் சுமார் 13.30 மணிக்கு தோட்டக்குறிச்சி மலையம்மன் கோவிலில் சாமி கும்பிட்டு விட்டு, நீங்களும், உங்கள் நண்பர் தங்கமணியும் வெளியே வந்தபோது, வேலாயுதம்பாளையம் போலீசார் இவ்வழக்கின் 6ம் எதிரி கிரி (எ) கிரிதரனை கைது செய்து வைத்திருந்தனர் என்றால் சரிதான் அவர் பெயர் எனக்கு தெரியாது. அப்போது ஆய்வாளர் அவரை விசாரித்தபோது, எதிரி எங்கள் முன்னிலையில் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் கணிணியில் பதிவு செய்து, பிரிண்ட் எடுத்ததில், எதிரி கையெழுத்து செய்தார் என்று சொன்னால் பேப்பரில் கையெபத்து செய்ய சொன்னார்கள் நாங்கள் அதில் கையொப்பம் செய்தோம் என்றும், பின்னர் ஒப்புதல்

வாக்குமூலத்தில் சொன்னபடி, எதிரி ஆஜர் செய்த ஸ்கூட்டி வாகனத்தை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் 15.15 மணிக்கு கைப்பற்றினார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**7 மற்றும் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

ஒம்./-**K.H.**இளவழகன்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW29**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **தங்கமணி** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 12th day of December 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார்கள் மற்றும் 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா P.T.Warrant மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் காணொலி காட்சி வழியாக ஆஜராகியுள்ளார். விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை காணொலி காட்சி மூலமாக கணினி திரையிலேயே எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் புஞ்சைத்தோட்டக்குறிச்சியில் வசித்து வந்து, டெக்ஸ்டைல்ஸில் பேக்கிங் வேலை வேலை செய்கிறேன். அ.சா.28 செல்வராஜ் என் மாமா ஆவார். நாள் வருடம் ஞாபகம் ஞாபகமில்லை நானும் என் மாமா செல்வராஜீம் தோட்டக்குறிச்சி மலையம்மன் கோவிலுக்கு சென்றிருந்தோம். அங்கு காவல்துறையினர் நிறைய பேர்

இருந்தார்கள். அங்கு போலீசார் வந்து எங்களிடம் கையெழுத்து போடுமாறு கேட்டார்கள். நாங்கள் இருவரும் கையெழுத்து போட்டுக்கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் கிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.50 என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது. என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.51 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில், கடந்த 21.12.2020 அன்று மதியம் சுமார் 13.30 மணிக்கு தோட்டக்குறிச்சி மலையம்மன் கோவிலில் சாமி கும்பிட்டு விட்டு, நானும், என் நண்பர் செல்வராஜும் வெளியே வந்தபோது, வேலாயுதம்பாளையம் போலீசார் இவ்வழக்கின் 6ம் எதிரி கிரி (எ) கிரிதரனை கைது செய்து வைத்திருந்தனர் என்றும், அப்போது ஆய்வாளர் அவரை விசாரித்தபோது, எதிரி எங்கள் முன்னிலையில் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் கணிணியில் பதிவு செய்து, பிரிண்ட் எடுத்ததில், எதிரி கையெழுத்து செய்தார் என்றும் அதில் நாங்கள் சாட்சி கொையப்பம் செய்தோம் என்று சொன்னால் கையொப்பம் மட்டும் செய்தோம். பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி, எதிரி ஆஜர் செய்த ஸ்கூட்டி

வாகனத்தை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் 15.15 மணிக்கு கைப்பற்றினார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

7 மற்றும் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

ஒம்./-**K.H.**இளவழகன்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW30**

| | | | |
|---|---|---|---|
| **Name** : | **நவீன்குமார்** | **Father's Name** | : |
| **Village** : | | **Taluk** | : |
| **Caste** : | | **Calling** | : |
| **Religion** : | | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 12th day of December 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார்கள் மற்றும் 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா P.T.Warrant மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் காணொலி காட்சி வழியாக ஆஜராகியுள்ளார். விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை காணொலி காட்சி மூலமாக கணினி திரையிலேயே எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் வேலாயுதம்பாளையம், காந்திநகரில் குடியிருந்து வருகிறேன். மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். நான் என் அண்ணன் சுரேஷ் என்பவரிடம் கொத்தனாராக கூலி வேலை செய்கிறேன். இருசக்கர வாகனத்தின் பதிவு எண்.TN 48 J 1796 என்ற ஸ்பிளண்டர் வாகனம் என்னுடையது தான். **அந்த வாகனத்தின் புகைப்படம் இதுதான். அது ஏற்கனவே அ.சா.ஆ.33 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** அந்த வாகனத்தை மாயவன் என்ற

பைனான்சியரிடமிருந்து அந்த இருசக்கர வாகனத்தை விலைக்கு வாங்கினேன். அந்த வாகனத்திற்கு பெயர் மாற்றம் செய்யாமல் வைத்திருந்தேன். நான் வேலாயுதம்பாளையம் பைபாஸ் கல்யாண மண்டபத்தை ஒட்டி வீடு கட்டும் கட்டுமான வேலை செய்துக்கொண்டிருந்தேன். **TN 47 AQ8502 என்ற வண்டி என் அண்ணன் சுரேசின் வண்டியாகம். அதன் புகைப்படம் இதுதான். அது ஏற்கனவே அ.சா.ஆ.30 ஆக குறியீடு செய்யப்பட்டிருந்தது**. தாய்வழக்கில் உள்ள எதிரிகள் பிரசாந்த், பிரசாத் ஆகியோர் என் அண்ணன் சுரேஷிடம் வேலை செய்பவர்கள் ஆகயைால் மேற்சொன்ன இருவரும் எனக்கும் பழக்கமானவர்கள். அவ்வப்பபோது வெளியில் செல்வதற்கு மேற்சொன்ன பிரசாந்த், பிரசாத் ஆகியோர் என்னிடமும் என் அண்ணனிடமும் வண்டியை வாங்கிச்செல்வது உண்டு. 17.12.2020 அன்று வண்டியை பிரசாந்தும், பிரசாத்தும் என் வண்டியையையும், என் அண்ணன் வண்டியையும் மதியம் 2.00 மணியளவில் எடுத்துச்சென்றார்கள். அதன்பிறகு பிரசாந்த்தும், பிரசாத்தும் எடுத்துச்சென்ற வண்டியை திருப்பி கொடுக்கவில்லை. கொலை செய்துவிட்டதாக சொன்னார்கள். அதன்பிறகு வேலாயுதம்பாளையம்காவல்நிலையத்திலிருந்து போன் செய்து என்னை காவல்நிலையம் அழைத்தார்கள் நான் என் அண்ணன் சுரேஷ்கும் தகவல் சொன்னேன். காவல்நிலையத்தில் என் அண்ணன் வண்டியும், என்னுடைய வண்டியும் இருந்தது. காவல்நிலையத்தில் பிரசாந்த், பிரசாத் ஆகியோர் இருந்தார்கள். நான் காவல்நிலையத்தில் பிரசாந்த்தும், பிரசாத்தும் எங்களிடத்தில் வண்டியை வாங்கிச்சென்றார்கள் என்று கூறினேன். இது குறித்து காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். (3A பென்டிரைவில் உள்ள A02_20201217165200 விடியோ காண்பிக்கப்பட்டது.) அதைப்பார்த்து வெள்ளை சட்டை அணிந்து நீல கலர் வாகனத்தை பார்த்து இது தான் தன்னுடைய வாகனம் என்று சாட்சி அடையாளம் காண்பித்தார். (வீடியோவில்

வெள்ளை டீசர்ட், மஞ்சள் டிரவுசர் போட்டு வரும் நபர் பிரசாத் என்று சாட்சி அடையாளம் காண்பித்தார்.) (8502 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை தன்னுடைய அண்ணன் வண்டி என்று 04.04 நிமிடத்தில் அடையாளம் காண்பித்தார்.) (என்னுடைய வாகனத்தில் வெள்ளை சட்டை போட்டு வண்டி ஓட்டி வரும் நபருக்கு பின்னால் அமர்ந்துள்ள நபர் பிரசாந்த் என்று அடையாளம் காண்பித்தார்) (நீ.ம.சா.ஆ.8-ல் A05_20201217165200 வீடியோ சாட்சிக்கு காண்பிக்கப்பட்டு 03.17 வது நிமிடத்தில் என் வண்டியில் உட்கார்ந்து வண்டிக்கு பெட்ரோல் போடும் நபர் பிரசாந்த் என்று அடையாளம் காண்பித்தார்.) (3_01_R_17122020042304PM-1 வீடியோ போட்டு காண்பித்தபோது மஞ்சள் நிற டிராயர், வெள்ளை நிற டீசர்ட் அணிந்து வரும் நபர் பிரசாத்தை போலத்தான் தெரிகிறது என்று சாட்சி கூறுகிறார்) இது சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். (தற்போது எதிரி தரப்பு வழக்கறிஞர் நகலாக இருப்பதால் சிசிடிவி புட்டேஜிற்கு ஆட்சேபனை தெரிவித்தார்)

<u>7 மற்றும் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்பு வழக்கறிஞர் காணொலி காட்சி மூலம் ஆஜராகி இருந்த போதும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

ஒம்./-**K.H.**இளவழகன்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.